(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## முதலாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2023

FWC

| | | |
|---|---|---|
| புவியியல் Geography | Three Hours | 22 T I,II |
| | Gr -12 (2024) | |

மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்**

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது. பகுதி I, 15 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இவ்வினாத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் அ, ஆ, இ என மூன்று பகுதிகள் தரப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- பகுதி I, பகுதி II, பகுதி III ஆகியவற்றிற்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

## பகுதி – I

1. 1: 50,000 என்ற அளவுத்திட்டத்தில் தயாரிக்கப்பட்ட இலங்கையின் இடைவிளக்கப்படங்களின் எண்ணிக்கை
   (1) 80 (2) 85 (3) 87 (4) 90 (5) 92 (…….)

2. இலங்கையின் ஆகக் கூடிய நீளத்திளை கிலோ மீற்றரில் தருக.
   (1) 432 km (2) 448 km (3) 500 km (4) 510 km (5) 600 km (…….)

3. இலங்கையின் ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பான தகவல்களை வரைந்து காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் வரைபு
   (1) பிரிக்கை வரைபு (2) கோட்டு நிரல் வரைபு (3) கோட்டு வரைபு
   (4) இழைவரையம் (5) பாச்சல் படம் (…….)

4. புவியியல் தகவல் முறையில் தரவுகளைக் களஞ்சியப்படுத்தும் முறைகளின் எண்ணிக்கை
   (1) பத்து (2) ஒன்பது (3) எட்டு (4) ஐந்து (5) இரண்டு (…….)

5. நபர் ஒருவர் தான் செல்ல வேண்டிய இடத்தினைத் துல்லியமாக அறிந்து கொள்வதற்கு உதவுகின்ற நவீன படவரைகலை நுட்ப முறை
   (1) புவியியல் தகவல் முறைமை
   (2) பூகோள இட நிலைப்படுத்தல் முறைமை
   (3) தொலையுணர்வு தொழில் நுட்ப முறைமை
   (4) விமானப் படங்கள் நுட்ப முறைமை
   (5) செய்மதித் தொழில் நுட்ப முறைமை (…….)

6. புவியில் காணப்படும் முதலாம் வகை நிலவுருவங்கள்
   (1) மலைத் தொடர்கள், கண்டச் சாய்வுகள் (2) பள்ளத்தாக்குகள், நீர்வீழ்ச்சிகள்
   (3) சுவடு, முகடு (4) கண்டங்கள், சமுத்திரங்கள்
   (5) சமுத்திர அகழி, தீப்பாறைகள் (…….)

7. மண்ணின் பௌதிக இயல்புகளாவன
   (1) மண்ணின் நிறம், மண்ணின் இழையமைப்பு
   (2) மண்ணின் கனியம், அமிலத் தன்மை
   (3) மண்ணின் அமிலத்தன்மை, காரத்தன்மை
   (4) மண்ணின் காரத்தன்மை, காலநிலை
   (5) மண்ணின் இலகுதன்மை, கடினத்தன்மை (…….)

8. புவியை நோக்கி வருகின்ற விண்கற்கள் அழிதல், புற ஊதாக் கதிர்களை உறுஞ்சுதல் போன்ற உயிர்க்கோளத்தின் நிலைத்திருப்பிற்குப் பாரியளவு பங்களிப்பினை வழங்குகின்ற வளி மண்டலத்தின் படை
   (1) மாறன் மண்டலம் (2) வெப்ப மண்டலம் (3) இடை மண்டலம்
   (4) படை மண்டலம் (5) அயன் மண்டலம் (…….)

9. இலங்கையில் மிகப் பெரிய கனிய மணல் படிவு பரந்துள்ள இடம்
   (1) குதிரை மலை (2) பொல் கொட்டுவ (3) நிலாவெளி
   (4) புதுவைக் கட்டு (5) புல்மோட்டை (…….)

10. கண்டத் தகடு ஒன்றின் கீழ் சமுத்திரத்தகடு ஒன்று அமிழும் போது உருவாகும் நிலவுருவங்களில் ஒன்று.
   (1) மடிப்பு மலைகள் (2) அகழிகள் (3) தீவுகள்
   (4) வில் வளைவுகள் (5) சமுத்திர மத்திய முகடுகள் (…….)

11. கிராமியப் பகுதிகளில் காணப்படும் பண்புகளாவன.
   (1) சேவை, கைத்தொழில் நடவடிக்கைகள் அதிகம்.
   (2) போக்குவரத்து வலைப் பின்னல், நேர்கோட்டுக்குடியிருப்பு பண்பு காணப்படும்
   (3) சிதறிய குடியிருப்பு, விவசாயத்திற்கு அதிகளவு நிலப்பகுதி பயன்படுத்தப்படுகின்றது.
   (4) கொத்தணிக்குடியிருப்பு, விவசாயம் அதிகம்
   (5) குறைந்த சனத்தொகை, சேவை மையங்கள் அதிகம் (…….)

12. உலகின் குடித்தொகை அதிகளவில் பரவியுள்ள வலயங்கள் காணப்படும் கண்டம் எது?
   (1) ஐரோப்பா (2) ஆபிரிக்கா (3) வடஅமெரிக்கா
   (4) அவுஸ்ரேலியா (5) ஆசியா (…….)

13. சனத்தொகைக் கட்டமைப்பின் பிரதான அலகுகள்
   (1) வயது, பால் (2) மதம், இனம் (3) பிறப்பு, இறப்பு
   (4) இடப்பெயர்வு, மதம் (5) மொழி, பால் (…….)

14. இலங்கையில் குடித்தொகை வளர்ச்சியின் இட ரீதியான பரம்பலில் வளர்ச்சி வீதம் அதிகமாகவுள்ள கால நிலை வலயம்
   (1) இடைமாறு வலயம் (2) ஈர வலயம் (3) உலர் வலயம்
   (4) அரைகுறை வரள் வலயம் (5) உலர் நில ஈர வலயம் (…….)

15. தற்காலிகமாக வெளிநாடுகளில் வாழும் இலங்கையர் அதிகளவில் இடம் பெயர்ந்து இருப்பதற்குகான நோக்கம்.
   (1) கல்வி (2) தொழில் (3) பொழுது போக்கு
   (4) அரசியல் காரணங்கள் (5) ஆடம்பர வாழ்வு (…….)

(15 x 1 = 15 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# பகுதி - II

**அறிவுறுத்தல்கள்**

- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- இவ்வினாக்களுக்கு விடையளிப்பதற்கு 1:50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதியும் உலகப் புறவுருவப்படமும் வழங்கப்படும்.

*1.* இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட *1:50,000* அளவுதிட்டத்தில் அமைந்த ஹப்புத்தள இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

குறிப்பு
- விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும், அதன் உபபிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- இடவிளக்கப்படத்தின் மேல் விடைகள் எழுதப்படக் கூடாது.
- உமது விடைத்தாளுடன் தரப்பட்டுள்ள இடவிளக்கப்படத்தினை இணைக்க வேண்டாம்.

(i) உமக்குத் தரப்பட்ட பிரதேசத்தில் உள்ள இரண்டு மாகாணங்களையும், இரண்டு மாவட்டங்களையும் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) இப்பிரதேசத்தில் உள்ள போக்குவரத்து வீதிகள் இரண்டினைப் பெயரிடுக. *(01 புள்ளிகள்)*

(iii) இப்பிரதேசத்தில் திரிகோண நிலையத்தினால் குறித்துக்காட்டப்பட்டிருக்கும் அதி கூடிய உயரத்தினையும், குறைந்த உயரத்தினையும் தருக. *(01 புள்ளிகள்)*

(iv) இப்பிரதேசத்தில் உள்ள நான்கு சேவை மையங்களைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(v) இப்பிரதேசத்தில் செய்கைப்பண்ணப்படும் நான்கு பயிர்களைத் தருக. *(02 புள்ளிகள்)*

(vi) உமக்குத் தரப்பட்ட ஹப்புத்தளைப் பிரதேசத்தின் வட பகுதியின் குடியிருப்புப் பரம்பலை வரையறுத்துள்ள இரண்டு காரணிகளை விபரிக்குக. *(04 புள்ளிகள்)*

(vii) இப்பிரதேசத்தினை விருத்தி செய்வதற்கு நீர் கூறக் கூடிய ஆலோசனைகள் இரண்டினைத் தருக. *(04 புள்ளிகள்)*

(viii) தென்கிழக்குப் பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கைகளைத் தீர்மானித்த இரண்டு காரணிகளை விளக்குக. *(04 புள்ளிகள்)*

*2.* தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

(i) துருக்கி

(ii) 0° நெடுங்கோடு

(iii) அகுகாஸ் நீரோட்டம்

(iv) காபென்ரேரி வளைகுடா

(v) கரிபியன் கடல்

(vi) மிசூரி மிசுசிப்பி நதி

(vii) ஜப்பான்

(viii) அல்ப்ஸ் மலைத்தொடர்

(ix) ஆபிரிக்கா கண்டத்தில் அபிவிருத்தி அடைந்த நாடு

(x) பினாடுபோ எரிமலை காணப்படும் நாடு *(10 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## அ - பகுதி III

3. (i) புவிக்கோளத்தின் இரண்டு பிரதான பிரிவுகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)
   (ii) 3 (i) இல் பெயரிட்ட இரண்டு பிரிவுகளின் பண்புகளைச் சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)
   (iii) மண்ணின் பக்கப்பார்வை/ குறுக்குவெட்டு முகத்தினை வரைந்து படைகளைப் பெயரிட்டு அப்படைகளில் இரண்டின் பண்புகளைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)
   (iv) மண்வளம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியதற்கான மூன்று காரணங்களை விளக்குக (06 புள்ளிகள்)

4. (i) புவிநடுக்கம் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)
   (ii) புவிநடுக்கம் ஏற்படும் நான்கு பிரதான வலயங்களைப் பெயரிட்டு, இப்பகுதிகளில் புவிநடுக்கம் அதிகளவில் ஏற்படுவதற்கான காரணத்தினைக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)
   (iii) புவிநடுக்கத்தினால் ஏற்படுகின்ற மூன்று விளைவுகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)
   (iv) புவிநடுக்கத்தினால் ஏற்படுகின்ற சேதங்களை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளக் கூடிய மூன்று நடவடிக்கைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

## ஆ - பகுதி IV

5. (i) குடிப்பெயர்வு என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)
   (ii) சர்வதேச குடிப்பெயர்வினை துரிதப்படுத்துகின்ற மூன்று காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iii) சர்வதேசப் குடிப்பெயர்வாளர்களால் குடியேறும் நாடுகளில் ஏற்படும் மூன்று சாதக, பாதக விளைவுகளை ஆராய்க. (06 புள்ளிகள்)
   (iv) அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் காணப்படும் பிறப்பு வீதவேறுபாட்டிற்கான மூன்று காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

6. (i) இலங்கையில் சனத்தொகை அடர்த்தி கூடிய ஒரு மாவட்டத்தினையும் சனத்தொகை அடர்த்தி குறைந்த ஒரு மாவட்டத்தினையும் தருக. (02 புள்ளிகள்)
   (ii) இலங்கையின் ஈரவலயத்தில் சனத்தொகை அடர்த்தியாக இருப்பதற்குப் பங்களித்த மூன்று காரணிகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)
   (iii) இலங்கையில் உள்நாட்டு இடப்பெயர்விற்கான மூன்று காரணங்களை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) இலங்கையின் குடித்தொகை அதிகரிப்புடன் தொடர்புடைய மூன்று பிரச்சினைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

## இ - பகுதி V

7. (i) தொலையுணர்வு தொழில்நுட்ப செயற்பாடுகளின் போது தரவு சேகரிப்பதற்குப் பயன்படுகின்ற இரண்டு முறைகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)
   (ii) மேலே (i) இல் பெயரிட்ட இரண்டு முறைகளையும் விளக்குக. (05 புள்ளிகள்)
   (iii) தொலையுணர்வுத் தொழில்நுட்பம் பிரயோகிக்கப்படும் நான்கு துறைகளைத் தருக. (04 புள்ளிகள்)
   (iv) நவீன படவரை கலையின் பொது இயல்புகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

8. (i) படம் என்றால் என்ன? (02 புள்ளிகள்)
   (ii) இடவிளக்கப்படங்களின் மூன்று முக்கியத்துவத்தினை விபரிக்குக. (05 புள்ளிகள்)
   (iii) புவியியல் தகவல் முறைமை (GIS) இன் முக்கியத்துவத்தினை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (04 புள்ளிகள்)
   (iv) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை (GPS) பயன்படுத்தப்படும் இரண்டு துறைகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு நடாத்தும் முதலாம் தவணைப் பரீட்சை – 2023

தரம் 12 (2024) புவியியல்



NFWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## தவணைப் பரீட்சை - 2023
## National Field Work Centre, Thondaimanaru. Term Examination - 2023

SRI LANKA 1 : 50,000 – SHEET No.76 – HAPUTALE (PART OF)

